திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எவ்வளவு காலமாக மூடப் பட்டுக் கிடந்தன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 26—1—1971, 16—1—1971 ஆகிய தேதிகள் முதல் இரண்டு அரங்கங்கள் மூடப்பட்டிருந்தன. இதில் பி.டபிளியு.டி. பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டு, அந்த பழுது பார்க்கவேண்டிய கடமை முடிந்து மறுபடியும் அப்படிப்பட்ட டிடேனஸ் பேசிலி (நோய்க்கிருமி) ஏற்படுவதற்கு இடம் இல்லையென்று தீர்மானித்து 8—3—1972 முதல் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மொத்தம் எத்தனை அறுவைக் கூடங்கள் உள்ளன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கே நான்கு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்கள் இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு மேலாக இதன் வேலைகள் நடந்திருக்கின்றன. இவ்வளவு நீண்ட காலம் தேவையா என்பதையும் இவ்வளவு காலதாமதம் ஏன் ஏற்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலில் இந்த நோய் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து காண ஒரு மாத, இரண்டு மாத காலம் ஆகிவிட்டது. ஆராய்ச்சிக்குப் பின்னர் வழக்கம்போல் ஒரு அறுவை சிகிச்சை அரங்கைப் பழுதுபார்ப்பது என்றால், பி.டபிள்யு.டி. இலாகா பணி தேவையே இருக்காது. அப்படி நிறைவேற்றலாம் என்ற முயற்சி எடுக்கப்பட்டு, அதற்குப் பின்னர் சிவில் ஒர்க்ஸ் நடைபெற்றாக வேண்டு மென்று தீர்மானம் செய்ததால் தாமதம் ஏற்பட்டது. இனியாவது டிடேனஸ் வராமலிருந்தால் போதும் என்ற அடிப்படையில் எட்டு மாத காலம் இடையே தள்ளி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், மற்ற அரங்கங்கள் பயன்பட்டதால் மருத்துவப் பணிக்குக் குந்தகம் ஏற்படவில்லை.

Food Adulteration Cases.

* 6. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of Food Adulteration cases that have been detected in Madras City during 1971 monthwar ?

1972 ஆகஸ்டு 9]

உணவுக் கலப்பட வழக்குகள்.

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971-ல் சென்னை மாநகரில் கண்டுபிடிக்கப்பட்ட உணவுக் கலப்பட வழக்குகளின் மாதவாரியான எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 1971-ம் ஆண்டில் மாத வாரியாக சென்னைமாநகரில் கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை வருமாறு:—

மாதம்.	கலப்படம் செய்யப்பட்ட மாதிரிகள்.
சனவரி	38
பிப்ரவரி	28
மார்ச்	29
ஏப்ரல்	41
மே	44
சூன்	46
சூலை	46
ஆகஸ்டு	59
செப்டம்பர்	29
அக்டோபர்	27
நவம்பர்	23
டிசம்பர்	38

THIRU D. SANTOSHAM: Sir, I know that usually these prosecutions are directed against the retailers, but the real culprits are wholesalers and manufacturers. I want to know in what percentage of cases attempts were made to track and prosecute the real culprits, the wholesalers and manufacturers.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இவ்வாறு எடுக்கப்பட்ட சாம்பிள்ஸ் 416, 250 என்ற விதாச்சாரத்தில் மாதத்திற்கு ஏறத்தாழ 300 அளவுக்கு எடுக்கப்பட்டுள்ளது. அவைகளில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

'பர்சன்டேஜ் ஆப் அடல்ட்டிரேஷன்' ஏறத்தாழ 10, 11 சதவிதம் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. அவைகளுக்காக வழக்குத் தொடரப்பட்டதில் ஏறத்தாழ 90 சதவிதம் வழக்குகள் தண்டனைக்குரியவை ஆக்கப்பட்டன. ரீட்டெயிலரைத் தான் கலப்படப் பண்டம் விற்பதற்காக தண்டிக்கும் நிலைமை மத்திய சர்க்கார் உருவாக்கிய சட்டத்தால் ஏற்படுகிறது. கலப்படச் சட்டத்தில் சில்லறை வியாபாரிகள் மட்டுமல்லாமல் மொத்த வியாபாரிகள் பண்டங்களை சில்லறை வியாபாரிக்கு விற்றவர்களாக இருப்பதால், அவர்களையும் வழக்குகளுக்கு உட்படுத்துவதற்கு திருத்தங்கள் தேவை என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறது. அண்மையில் மத்திய சர்க்கார் அந்தக் கருத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் முடிவு தெரிந்தவுடன் மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, இந்த வழக்குகளில் எந்த மாதிரிக்கலப்படங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எம்மாதிரியான கலப்படங்கள் என்ற விவரங்களை வாய்மொழி பதிலில் தெரிவிக்க முடியாது. தனிக் கேள்வி போட்டால், விடை அச்சடித்துக் கொடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, கண்டு பிடிக்கப்பட்ட கேஸ்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தண்டிக்கப்பட்ட கேஸ் எத்தனை, தண்டனை எத்தகையது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தண்டனைபற்றிச் சரியான விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் ஒரு திங்களில் 28 வழக்குகள் போட்டு 26 வழக்குகளிலும் ஒரு திங்களில் 26 வழக்குகள் போட்டு 24 வழக்குகளிலும், இன்னொரு திங்களில் 48 வழக்குகள் போடப்பட்டு 38 வழக்குகளிலும் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏறத்தாழ 100-க்கு 80 அல்லது 90 வழக்குகளில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, கலப்படம் என்பது மிகவும் இழுக்கானது. அதிலும் குழந்தைகள் உணவில் பெரும் பங்கு கலப்படம் இருப்பது அரசுக்குத் தெரிந்தும், அதிலிருந்து வியாபாரிகள் தப்பிப்பதற்கு

1972 ஆகஸ்டு 9]

சட்டத்தில் குறைபாடுகள் இருப்பதை அரசு உணருகிறதா? அவ்வாறு உணர்ந்து அரசு ஏதாகிலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதை இந்திய அரசும் உணர்ந்திருக்கிறது. எல்லா மாநில அமைச்சர்களும் உணர்ந்திருக்கிறார்கள். சமுதாயத்தின் சீர்கேடான நிலைமைகளுக்கு இவைகள் எல்லாம் சான்றுகள்.

Government Hospitals in all the Town Panchayats.

* 7. *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to set up Government Hospitals in all the Town Panchayats in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof ?

நகரப் பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்க மருத்துவமனை

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகரப் பஞ்சாயத்துக்களிலும் அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rat-falls at Tiruppur.

* 8. *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether a number of cases of rat-falls have been reported at Tiruppur in Coimbatore District in October, 1971;

(*b*) if so, whether any attack of plague was brought to the notice of the Government; and

(*c*) the steps taken thereon ?